**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. No. 140/2023**

**Date : 24.04.2026**

**வா.சா. 1 - பாலமுருகன்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 5 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் மளிகை கடை வைத்துள்ளேன். வாசாஆ 4 நான் தாக்கல் செய்துள்ள ரசீது என்றால் சரிதான். வாசாஆ 4 ல் எனது பெயர் இல்லை என்றால் சரிதான். மரியா டிராவல்ஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வாசாஆ 9ல் உள்ள 3 அறிவிப்புகளில் எனது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வாசாஆ 9 3 அறிவிப்புகளிலும் எனது பெயர் இல்லை. நான் காரணமின்றி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாசாஆ 9 ஆவணத்திற்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

வழக்கு பட்டிகை சொத்தின் சர்வே எண் என்ன என்றால் ஞாபகம் இல்லை. வழக்கு பட்டிகை சொத்து கடை எனக்கு உரிமைப்பட்டது என்பதை காட்டுவதற்கு நான் எவ்வித ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்குரை மற்றும் பிராமாண வாக்குமூலத்தில் விஸ்வநாதன் எனது மாமா என்று குறிப்பிட்டுள்ளேன். மேற்படி விஸ்வநாதனின் வாரிசுகள் யார் யாரென்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

நான் மேற்படி விஸ்வநாதனின் வாரிசு கிடையாது என்றால் சரிதான். அவர் எனது மாமா.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**